දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
INLAND REVENUE DEPARTMENT

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2- ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு - 2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011 - 2338574/ 2338659/ 2338635/ 2338570/ 2338543
දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135300/ 2135410/ 2135412 / 2135413
E-Mail – secretariat@ird.gov.lk
Web: www.ird.gov.lk

சுற்றக்கை இலக்கம் : SEC/2026/E/07 — 2026 செப்டம்பர் 22

## உரியதாக குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுவதனை கட்டாயமாக்குதல்.

இச் சுற்றரிக்கை கீழ் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கு தொடர்படையதாகும்.

(i) சகல வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்.

(ii) சகல உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள்

(iii) மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

(iv) மாகாண வருமான ஆணையாளர்கள்.

(v) பிரதேச செயலாளர்கள்

(vi) பதிவாளர் நாயகத் திணைக்களம்.

(vii) கம்பனிப் பதிவாளர் திணைக்களம்

(viii) கடன் அட்டை வழங்கும் நிறுவனங்கள்.

(ix) ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்கள்

1. **பொருள்: 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 103 ஆம் பிரிவின் உபபிரிவு (6) இன் கீழ், 2026 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டபடி, வரி செலுத்துநர் அடையாள இலக்கச் சான்றிதழை (TIN Certificate) கட்டாயமாக சமர்ப்பித்தல்**

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ஆகிய நான், 2026 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக, அனைத்து தொடர்புடைய அரச நிறுவனங்கள், ஒழுங்குமுறை அதிகாரசபைகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இதன்மூலம் அறிவிப்பது யாதெனில், உள்நாட்டு இறைவரிச்

சட்டத்தின் 102(3) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும், **2026 நவம்பர் 1** ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் போது செல்லுபடியாகும் வரி செலுத்துநர் அடையாள இலக்கச் சான்றிதழை )Taxpayer Identification Number – TIN Certificate) சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுவர்.

ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் பொறுப்பான சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அந்தந்த சேவையை வழங்குவதற்கு முன்னர், இக்கட்டாயத் தேவைக்கு இணங்குதலை உறுதி செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

## 2. TIN சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பணிகள்

| தொடர்புடைய சேவைகள் (பணிகள்) | TIN இலக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பான உத்தயோகத்தர். |
|---|---|
| ஏதேனும் **நிதி நிறுவனமொன்றில் **கணக்கினை ஆரம்பித்தல். | நிதி நிறுவனத்தின் முகாமையாளர்கள் |
| கட்டட திட்டத்திற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் | உள்ளுராட்சி நிறுவனங்களின் தலைவர்கள், செயற்படுத்தும் பணிப்பாளர் அல்லது ஆணையாளர். |
| மோட்டார் வாகனத்தினைப் பதிவுசெய்தல் | மோட்டார்போக்குவரத்து ஆணையாளர் நாயகம் |
| மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தினை புதுப்பித்தல். | மாகாண வருமான ஆணையாளர் அல்லது பிதேச செயலாளர். |
| காணி அல்லது காணி உரிமையினைப் பதிவு செய்தல். | பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம் |
| வியாபாரத்தினைப் பதிவு செய்தல். | பிரதேச செயலாளர் |
| இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் பங்குகளை மாற்றுவதற்கு, மாற்றுபவர் மற்றும் பெறப்படுபவர் ஆகியோரால். | கம்பனி பதிவாளர் நாயகம் |
| கடன் அட்டையினைப் பெற்றுக் கொள்ளல். | வங்கி அல்லது கடன் அட்டை வழங்கும் உருவகத்தின் முகாமையாளர். |

**கணக்கு** என்பது, ஒரு நிதி நிறுவனத்தில் பராமரிக்கப்படும் சேமிப்புக் கணக்கு, காலவரையறை வைப்புக் கணக்கு (Term Deposit), நடப்புக் கணக்கு அல்லது வேறு எந்த வகையான வைப்புக் கணக்கையும் உள்ளடக்கும். கூட்டுக் கணக்கைப் (Joint Account) பொறுத்தவரையில், இந்நோக்கத்திற்காக கூட்டுக் கணக்கின் ஒவ்வொரு கணக்கு வைத்திருப்பவரும் தனித்தனியாகக் கருதப்படுவார்.

**நிதி நிறுவனம்** என்பது, வங்கித் தொழிலை மேற்கொண்டு வரும் எந்தவொரு நிறுவனத்தையோ அல்லது நபர்களின் கூட்டமைப்பையோ குறிக்கும். மேலும், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பொருளின்படி உரிமம் பெற்ற விசேட வங்கியையும் (Licensed Specialized Bank), வங்கியைப் போன்றே ஒழுங்குபடுத்தப்படும் எந்தவொரு வங்கி அல்லாத நிதி நிறுவனத்தையும் (Non-Bank Financial Institution) உள்ளடக்கும்.

## 3. தொடர்புடைய அதிகாரிகளின் பொறுப்புகள்

மேற்குறிப்பிடப்பட்ட அதிகாரிகள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்:

(i) தொடர்புடைய பரிவர்த்தனையைச் செயல்முறைப்படுத்துவதற்கு முன்னர், விண்ணப்பதாரர் செல்லுபடியாகும் **வரி செலுத்துநர் அடையாள இலக்கச் சான்றிதழை (TIN Certificate)** சமர்ப்பிக்குமாறு கோருதல்.

(ii) TIN சான்றிதழின் உண்மைத்தன்மையைச் சரிபார்த்தல்.

(iii) கீழே குறிப்பிடப்பட்டுள்ள விலக்கு பொருந்தும் சந்தர்ப்பங்களைத் தவிர, இவ்விதிகளுக்கு உட்பட்ட எந்தவொரு பரிவர்த்தனையும் சட்டபூர்வமான தேவைக்கு இணங்காமல் நிறைவு செய்யப்படாதிருப்பதை உறுதிசெய்தல்.

(iv) கண்காணிப்பு நோக்கங்களுக்காகத் தேவையான பொருத்தமான இணக்கப்பாட்டுப் பதிவுகளைப் பராமரித்தல். இதன் பொருட்டு, பெறப்பட்ட ஆவணத்தின் பிரதியைப் பாதுகாத்து வைத்திருக்கலாம் அல்லது விண்ணப்பதாரரின் TIN இலக்கத்தை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பராமரிக்கும் பதிவுகளில் பதிவு செய்யலாம்.

**** TIN சான்றிதழானது,**

(அ) TIN சான்றிதழானது, நபர் ஒருவர் பதிவு செய்யப்படும் போது, அவருக்கு வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (Taxpayer Identification Number – TIN) வழங்கி, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுகிறது. 31.12.2023 அன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து குடியிருப்பாளர்களுக்கும், அல்லது 01.01.2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் 18 வயதை அடையும் அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் (அந்த வயதை அடைந்தவுடன்), 31.05.2023 திகதியிடப்பட்ட 2334/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி TIN பெறுவது கட்டாயமாகும்.

(ஆ) உள்நாட்டு இறைவரி திணைக்களம், அதன் **E-Services** இணையவழிச் சேவைத் தளத்தின் மூலம் தனிநபர்கள் தங்களுடைய TIN இலக்கத்தைச் சரிபார்க்கும் வசதியை வழங்குகிறது. இச்சரிபார்ப்பின் போது TIN இலக்கம் திரையில் காட்டப்படும். எனவே, இந்தச் சரிபார்ப்பின் அச்சுப் பிரதியுடன், தனிநபரின் தேசிய அடையாள அட்டை (NIC) இலக்கமும் TIN இலக்கமும் இடம்பெற்றிருந்தால், அதனை உத்தியோகபூர்வ TIN சான்றிதழுக்கான மாற்று ஆவணமாக ஏற்றுக்கொள்ளலாம்.

(இ) இந்நோக்கத்திற்காக, அதிகாரிகள் மின்னணு பிரதிகளையும் (Soft Copies) ஏற்றுக்கொள்ளலாம்.

TIN சான்றிதழின் மாதிரி மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட திரை அச்சுப்பிரதியின் மாதிரி ஆகியவை **இணைப்பு 1** இல் வழங்கப்பட்டுள்ளன.

## TIN சான்றிதழை சமர்ப்பிப்பதிலிருந்து விலக்குகள்

TIN சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டிய தேவை பின்வரும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்குப் பொருந்தாது:

(i) தொடர்புடைய பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும் திகதியன்று பதினெட்டு (18) வயதை பூர்த்தி செய்யாத எந்தவொரு தனிநபரும்.

(ii) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் (Inland Revenue Act, No. 24 of 2017) நோக்கங்களுக்காக வதிவிடமற்ற நபராக (Non-Resident Individual) கருதப்படும் எந்தவொரு தனிநபரும்.

இந்த விலக்கைப் பெறுவதற்காக, இலங்கைக்கு வருகை தந்து, தொடர்புடைய பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும் திகதியன்று இலங்கையில் நூற்று எண்பத்து மூன்று (183) நாட்களுக்கும் குறைவாக தங்கியுள்ள குடியுரிமையற்ற (Non-Citizen) தனிநபர் ஒருவர், வதிவிடமற்ற தனிநபராகக் கருதப்படலாம்.

இந்த விலக்கின் நோக்கத்திற்காக, தாம் வதிவிடமற்ற நபர் என்ற நிலையை கோரும் வேறு எந்தவொரு தனிநபரும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்படும் வதிவிட நிலை உறுதிப்படுத்தல் கடிதத்தை (Confirmation of Residence Status) சமர்ப்பிக்க வேண்டும்.

இத்தகைய உறுதிப்படுத்தலை, **itp@ird.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

(iii) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஆணையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்பட்ட எந்தவொரு தனிநபரும்.

இந்த விலக்கைக் கோருவதற்காக, குறித்த தனிநபர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் நிராகரிப்பு கடிதத்தை **(Letter of Refusal)** பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) தூதரகச் சலுகைகள் சட்டத்தின் கீழ் அல்லது அது போன்ற சட்டத்தின் கீழ் தூதரகச் சலுகைகளுக்கு உரித்துடைய தனிநபர் அல்லது அமைப்பு.

(v) தனிநபர் அல்லாத எந்தவொரு நிறுவனமும் / நிறுவன அமைப்பும், இதில்:

- கம்பனிகள் (Companies)
- கூட்டுத்தாபனங்கள் / பங்காளித்துவ நிறுவனங்கள் (Partnerships)
- அரச நிறுவனங்கள் (Government Institutions)
- சங்கங்கள் (Societies)
- நிதியங்கள் (Funds)
- அறக்கட்டளைகள் (Trusts)
- அலகு நம்பிக்கை நிதியங்கள் (Unit Trusts)
- அரச சார்பற்ற நிறுவனங்கள் (Non-Governmental Organizations)
- ஏனைய நிறுவனங்கள் / நிறுவன அமைப்புகள் (Other Institutes)

ஆகியவை உள்ளடங்கும்.

## 4. அமுல்படுத்தப்படும் திகதி

**இந்த நடைமுறை 2026 நவம்பர் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்.** இச்சட்டரீதியான தேவைகளுக்கு முழுமையான இணக்கத்தை உறுதி செய்வதற்காக, அனைத்து தொடர்புடைய நிறுவனங்களும் தேவையான நிர்வாக, செயற்பாட்டு மற்றும் முறைமை சார்ந்த (System) ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**றுக்தேவி பீ. எச். பிர்நான்து**
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

Rukdevi P.H. Fernando
Commissioner General of Inland Revenue
Inland Revenue Department
Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02.

பிரதிகள்: 1. திறைசேரி செயலாளர் – நிதி அமைச்சு

2. கணக்காய்வாளர் – கணக்காய்வாளர் திணைக்களம்

3. ஆ5ளுநர் – இலங்கை மத்தி வங்கி

இணைப்பு 1 – TIN சான்றிதழ்

දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
INLAND REVENUE DEPARTMENT

<u>බදු ගෙවන්නා හඳුනාගැනීමේ සහතිකය</u>
<u>வரி செலுத்துநர் அடையாளச் சான்றிதழ்</u>
**<u>Taxpayer Identification Certificate</u>**

නිකුත් කල දිනය
வழங்கப்பட்ட திகதி
Date of issue } Date

Name and Address

බදු ගෙවන්නා හඳුනාගැනීමේ අංකය
வரி செலுத்துநர் அடையாள இலக்கம்
TAXPAYER IDENTIFICATION NUMBER } TIN in 9 Digits

ඔබට වෙන් කර ඇති බදු ගෙවන්නා හඳුනාගැනීමේ අංකය ඉහත සඳහන් පරිදි බව මෙයින් සහතික කරමි.

உங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வரி செலுத்துநர் அடையாள இலக்கம் மேலே குறிப்பிடப்பட்டதாகும் என நான் சான்றுப்படுத்துகின்றேன்.

I certify that the Taxpayer Identification Number assigned to you is as given above.

දේශීය ආදායම් කොමසාරිස් ජනරාල්
දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

Commissioner General of Inland Revenue
Inland Revenue Department

https://www.ird.gov.lk Page 1 of 1

## TIN இலக்கத்தை உறுதிப்படுத்தும் திரையின் அச்சுப் பிரதியாகும்



(/)

### Verify IRD Information

**Entity search**

| | | | |
|---|---|---|---|
| Entity ID type | NIC | Entity ID | NIC |
| Email ID | | | |
| Mobile No | [redacted] | Send OTP | |
| * Enter OTP | [redacted] | | |

The e-service facility is mainly compatible with Google Chrome and Microsoft Edge browsers. Kindly use the latest version of Google Chrome or Microsoft Edge browser.

Search Clear Go to Main Menu

**Information**

**You are already registered with the Inland Revenue Department. Your Taxpayer Identification Number (TIN) is**

TIN in 9 Digits

**If you have not received the Taxpayer Registration Certificate, you may visit the IRD Head Office or the Nearest Metro/Regional Office to obtain the Taxpayer Registration Certificate**

**For further details, call our hotline 1944**

Department of Inland Revenue, Sri Lanka,
Chittampalam A. Gardiner Mawatha, Colombo 02.
© 2014, All rights reserved by Inland Revenue Department - Sri Lanka

[redacted]